## 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சிறப்பு கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :**
**திரு. சி. பாண்டு,**
**நகராட்சி பொறியாளர் மற்றும்**
**தனி அதிகாரி(பொ),**
**விருத்தாசலம் நகராட்சி.**

**பொருள் எண். 1.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பூதாமூர் கிராமம் ரீ. சர்வே எண்கள் 53/4, 56/4pt,56/5 pt, 56/6 pt ல் 1.28 ஏக்கர் அல்லது 55756.57 சதுரஅடி பரப்பளவு கொண்ட "குமரன் நகர்" மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017,03.01.2019 மற்றும் 07.01.2019ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். R 649/2019 என எண்ணிட்டு நாள். 06.08.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு.மு.ராதாகிருஷ்ணன் என்பவர் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா –3210.30 ச.அடி மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானப்பத்திர எண். 3813, நாள். 12.11.2019ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பூங்கா ஆகிய பொது உபயோக இடங்களை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 4222/2019/எப்1)

**தீர்மானம் எண். 3629 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2.**

விருத்தாசலம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020ன் கீழ் ரூ.175.00 இலட்சம் மதிப்பீட்டில் வி.ஐ.பி தெரு, ஆர்.சி. சர்ச் சுடுகாடு எதிர்புறம், வி.ஐ.பி முதல் குறுக்குத் தெரு, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் பின்புறம், வேலன் நகர், மாணிக்கவாசகர் நகர் விரிவாக்கம், கண்டியங்குப்பம் மெயின் ரோடு மற்றும் குறுக்குத் தெருக்கள் ஆகிய பகுதிகளில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு **(சிப்பம்–I)** நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.17349/2019/E3,நாள்.16.10.2019ல் நிர்வாக அனுமதியளித்தற்கிணங்க 12.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/s Shri Sembaiyanar Construction,<br>63,West Street,<br>Mudhanai(P.o),<br>Vriddhachalam(T.K), Cuddalore District. | (+) 4.90 % அதிகம் |
| 2 | M/s Devi Construction,<br>Cuddalore, Cuddalore District. | (+) 6.96 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் M/s Shri Sembaiyanar Construction,63,West Street,Mudhanai(P.o),Vriddhachalam(T.K),Cuddalore District.அவர்கள் மதிப்பீட்டைவிட அதிகமாக அளித்துள்ள 4.90 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3281/19/இ1)

**தீர்மானம் எண். 3630 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3.**

விருத்தாசலம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020ன் கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆலடி மெயின் ரோடு, பங்களா தெரு, தினசரி காய்கறி மார்கெட் ரோடு, இந்திரா நகர் விரிவாக்கம் மசூதி அருகில் ஆகிய பகுதிகளில் தார்சாலை, சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் **(சிப்பம்–II)** நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.17349/2019/E3,நாள்.16.10.2019ல் நிர்வாக அனுமதியளித்தற்கிணங்க 12.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/s Shri Sembaiyanar Construction,<br>63,West Street, Mudhanai(P.o),<br>Vriddhachalam(T.K), Cuddalore District. | (+) 4.85 % அதிகம் |
| 2 | M/s Devi Construction,<br>Cuddalore, Cuddalore District. | (+) 6.36 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் M/s Shri Sembaiyanar Construction,63,West Street,Mudhanai(P.o),Vriddhachalam(T.K),Cuddalore District.அவர்கள் மதிப்பீட்டைவிட அதிகமாக அளித்துள்ள 4.85 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3281/19/இ1)

**தீர்மானம் எண். 3631 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4.**

விருத்தாசலம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020ன் கீழ் ரூ.175.00 இலட்சம் மதிப்பீட்டில் வைரம் தெரு, பவழம் தெரு, பாலாஜி நகர் விரிவாக்கம், எம்.ஜி.ஆர் நகர், பூந்தோட்டம் பள்ளி முதல் ஏனாதிமேடு வரை, ஏனாதிமேடு முதல் பூதாமூர் வரை, கண்ணதாசன் தெரு, கம்பர் தெரு, சௌடாம்பிகா பின்புறம், தில்லை நகர் பாரதியார் தெரு கிழக்கு, தில்லை நகர் பெந்தகொஸ்தே சர்ச் சாலை, தில்லை நகர் எம்.ஜி. ஆஸ்பத்திரி ரோடு, அருணாச்சலம் தெரு, கணபதி தெரு, நவநீதம் திருமண மண்டப தெரு, திருமூலர் தெரு, தமிழ்நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி **(சிப்பம்–III)** நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.17349/2019/E3,நாள்.16.10.2019ல் நிர்வாக அனுமதியளித்தற்கிணங்க 12.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/s Shri Sembaiyanar Construction,<br>63,West Street,<br>Mudhanai(P.o), Vriddhachalam(T.K),<br>Cuddalore District. | (+) 4.79 % அதிகம் |

| | | |
|---|---|---|
| 2 | M/s Devi Construction, Cuddalore, Cuddalore District. | (+) 6.62 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் M/s Shri Sembaiyanar Construction,63,West Street,Mudhanai(P.o),Vriddhachalam(T.K),Cuddalore District.அவர்கள் மதிப்பீட்டைவிட அதிகமாக அளித்துள்ள 4.79 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3281/19/இ1)

**தீர்மானம் எண். 3632 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5.</u>**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் அமைந்துள்ள பகிர்மான குழாய்கள் மற்றும் பம்பிங் லைன்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் தினமும் நீரேற்றி வழங்கும் CI Valve கள் மற்றும் சின்டெக்ஸ் டேங்குகளில் ஏற்படும் லைன் மற்றும் Valve பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் ஏற்கெனவே ஒரு ஆண்டுக்கு மன்ற அனுமதி பெறப்பட்டு பணிகள் முடிக்கப்பட்ட நிலையில் மேலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஓராண்டுக்கு ஏற்படும் செலவினம் ரூ. 9,95,000/– ன்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3633 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நேரடி மின் மோட்டார்கள் இயக்க பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 17 நபர்களை மாதம் ரூ. 600/– ஊதியத்தில் விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிகுழு மூலம் டிசம்பர் 2019 வரை நியமித்துக் கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண். 3279, நாள். 31.12.2018 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதியதாக போடப்பட்ட ஆழ்துளை கிணறுகளை 9 நபர்களை நியமித்துக்கொள்ள டிசம்பர் 2019 வரை இந்நகர் மன்ற தீர்மான எண். 3460, நாள். 28.06.2019ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 15 மற்றும் 16 வது வார்டுகளுக்கு ஏற்கெனவே உள்ள 26 நபர்களுடன் கூடுதலாக 2 நபர்களை மாதம் ரூ. 600/– வீதத்தில் விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு மூலம் டிசம்பர் 2019 வரை நியமித்துக்கொள்ளவும், அதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ. 33600/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண். | மின் மோட்டார்கள் அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1. | 15 | செல்வராஜ் நகர் |
| 2. | 16 | ராஜீவ்காந்தி நகர் |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 6922/2017/இ2)

**தீர்மானம் எண். 3634 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16 வடக்கு பெரியார் நகர் பகுதியில் அமைந்துள்ள 400 வாட்ஸ் மின் விளக்குகளை Line Short ஆகி பழுதடைந்துள்ள காரணத்தினால் மேற்படி 400 வாட்ஸ் மின் விளக்குகளை மின்சார சிக்கனம் கருதி 200 வாட்ஸ் LED மின் விளக்குகளாக மாற்றி அமைக்கவும் மேலும் Sinex PVC Box 6 எண்ணிக்கை பொருத்தவும் ஏற்படும் தொகை ரூ. 3.25 க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3635 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16 தெற்கு பெரியார் நகரில் உள்ள பூங்காவில் உள்ள 400 மின் உயர் கோபுர மின் விளக்கு ஆகியவைகளை மின்சாரம் சிக்கனம் கருதி மேற்கண்ட சோடியம் விளக்குகளை மின்சாரம் சிக்கனம் கருதி மேற்கண்ட சோடியம் விளக்குகளைமாற்றி 6 எண்ணிக்கை பொருத்தவும். LED மின் விளக்குகளாக மாற்றிடவும் ஏற்படும் செலவின தொகை ரூ. 85000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3636 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9.**

விருத்தாசலம் நகராட்சி சார்பாக கீழ்கண்ட தினசரி நாளிதழ்கள் தொழில் மலரில் இந்நகராட்சியின் ஓராண்டு சாதனை விளம்பரம் வெளியிட்டதற்கான தொகை சம்மந்தப்பட்ட தினசரி நாளிதழ் நிறுவனத்திற்கு கீழ்கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தினசரி நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | இந்து தமிழ் திசை | 10000/– |
| 2. | தினத்தந்தி | 9794/– |
| 3. | மாலை மலர் | 8925/– |
| 4. | தினகரன் | 10000/– |
| 5. | தினமலர் | 22050/– |
| 6. | தினசூரியன் | 11025/– |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 4173/2019/இ1)

**தீர்மானம் எண். 3637 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10.**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 1ல் வயலூர் உரத்திடலில் உள்ள குப்பைகளை தரம்பிரிக்கும் இயந்திர கூடத்தில் (Mechinery Shed) Power Board சுற்றிலும் சுவர்வைத்து மேற்கூரை அமைத்து, Door அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1,15,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3638 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11.**

விருத்தாசலம் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2019–20ன் கீழ் ரூ. 9,70,000/– மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அருகில் 12.5 மீட்டர் உயரம் 150 வாட்ஸ் பவர் கொண்ட 6 LED விளக்குகள் பொருத்திய உயர் மின் கோபுர விளக்கு அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். அ3/4179/2019, நாள்.04.11.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 22.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.01 % குறைவு |
| 2 | திருமதி.வி.ஜெயகுமாரி,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.02 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஆர்.ராதாகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.01 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 5106 /19/இ1)

**தீர்மானம் எண். 3639 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 வடக்கு பெரியார் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் மோட்டார் Section Pipe 3” HDPE Hoose மாற்றி , ஸ்பேர் மோட்டார் இறக்கி போரினை சுற்றி ஜல்லி உள்வாங்கியுள்ளதால் புதியதாக ஜல்லி நிரப்பும் பணிக்கு பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 16 வடக்கு பெரியார் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் மோட்டார் Section Pipe 3” HDPE Hoose மாற்றி , ஸ்பேர் மோட்டார் இறக்கி போரினை சுற்றி | ராசி அண் கோ,<br>ஒப்பந்ததாரர்,<br>விருத்தாசலம். | 86325/– |

| | | | |
|---|---|---|---|
| | ஜல்லி உள்வாங்கியுள்ளதால் புதியதாக ஜல்லி நிரப்பும் பணி. | | |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3640 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 ஆலடி ரோட்டில் உடைந்த மழைநீர் வடிகால் சீர்செய்யும் பணிக்கு பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 8 ஆலடி ரோட்டில் உடைந்த மழைநீர் வடிகால் சீர்செய்யும் பணி. | திருமதி.கே. சாந்தி, ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 18400/– |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3641 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14.**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நுழைவுக் கட்டண வசூல் உரிமம் ஏலம் போகாத காணைத்தால் துறை ரீதியாக வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது. தற்போது போதிய ரசீது டோக்கன்கள் இருப்பில் உள்ளது. எதிர்வரும் ஓரிரு வாரங்களில் உள்ளாட்சி தேர்தல் அறிவிப்பு வெளியாக உள்ளதால் ரசீது டோக்கன் 2 இலட்சம் எண்ணிகையில் உள்ளூர் அச்சகம் ஸ்ரீ முருகன் பவர் பிரஸ்ஸில் அச்சிட்டு கொள்ளவும் அதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ. 30000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 7105/2017/அ2)

**தீர்மானம் எண். 3642 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15.**

விருத்தாசலம் நகராட்சி சுமார் 25.57 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு மற்றும் 33 வார்டுகளை கொண்ட முதல் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 73415 ஆகும். தற்போதைய 2019 ஆம் ஆண்டு கணக்கின்படி மக்கள் தொகை 80820 ஆகும். மேலும் இந்நகர் வருவாய் கோட்ட தலைமையிடமாக உள்ளதால் அரசு பணிக்காகவும் மற்றும் சுற்றியுள்ள சுமார் 50 கிராம மக்கள் வணிக பயன்பாட்டிற்காகவும் இந்நகருக்கு தினசரி சுமார் 50000 மக்கள் வந்து செல்கின்றனர். மேலும் இந்நகரில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில் மற்றும் நகருக்கு அருகில் உள்ள மணவாளநல்லூர் அருள் மிகு ஸ்ரீ கொளஞ்சியப்பர் திருக்கோயிலுக்கும் வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து ஏராளமான பொது மக்கள் இந்நகருக்கு வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் தற்போது இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள "B" Class செல்வராசு பேருந்து நிலையம் கட்டப்பட்டு சுமார் 30 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியால் தற்போதுள்ள மக்கள் தொகை பெருக்கத்திற்கு போதுமானதாக இல்லாத காரணத்தினாலும், மேலும் மேற்படி பேருந்து நிலையம் நகரின் மத்தியில் அமைந்துள்ளதால் அடிக்கடி நகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே மேற்படி பேருந்து நிலையத்திற்கு மாற்றாக நகரின் ஒதுக்கு புறமாக புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர கோரி சட்ட மன்ற உறுப்பினர் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை அளித்து வந்தனர்.

எனவே மேற்படி கோரிக்கைகளை ஏற்று புதிய பேருந்து நிலையம் அமைக்க இந்நகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லாத காரணத்தினால் நகரளவை வார்டு டி, பிளாக் எண். 6 நகரளவை எண். 2ல் 48250 ச.மீட்டரும், வார்டு டி, பிளாக் எண். 34, நகரளவை எண். 34ல் 78150 ச. மீட்டரும் உள்ள சுமார் 10 ஏக்கர், அரசு பீங்கான் தொழிற்சாலைக்கு சொந்தமான தற்போது எந்த பயன்பாடும் இல்லாத காலி இடத்தினை புதிய பேருந்து நிலையம் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு அரசிற்கு பிரேரணை சமர்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி இடத்தில் :"A" Class தரம் கொண்ட புதிய பேருந்து நிலையம் ரூ. 26.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது இந்நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் 2015–16, தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் வளர்ச்சி திட்டம் 2016–17 போன்ற பணிகள் மேற்கொண்டதற்கான நகராட்சி பங்கு தொகை ரூ. 8.00 கோடிக்கு மேல் வழங்கப்படாமல் நிலுவை உள்ளதாலும் மற்றும் ரூ. 1.00 கோடிக்கு மேல் மின்சார கட்டணம் நிலுவை உள்ளதாலும் நகராட்சி நிதியிலிருந்து மேற்படி பணியினை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே இந்நகராட்சியின் நலன் கருதி மேற்படி புதிய பேருந்து நிலையம் அமைக்க உண்டான நிதியினை அடிப்படை வசதிகள் திட்டம், இடைவெளி நிரப்பும் திட்டம் அல்லது வேறு ஏதேனும் அரசு திட்டத்தில் முழு மானியமாக ஒதுக்கீடு செய்து மேற்படி பேருந்து நிலையம் அமைக்க உரிய அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3970/2019/இ1)**

**தீர்மானம் எண். 3643 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16.**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 19 வி.ஜ.பி தெருவில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தால் அங்கு பெய்யும் மழையானது தேங்கி குளம் போல் காட்சி அளிப்பதால் அத்தெருவில் உள்ள பொதுமக்கள் வெளியில் வரமுடியாமல் சிரமப்படுகின்றனர். மேலும் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் (மழைநீர்) அப்பகுதி மக்களுக்கு தொற்று நோய் மற்றும் டெங்கு, மலேரியா போன்ற காய்ச்சல் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு அப்பகுதிக்கு மழைநீர்வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9,95,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3644 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17.**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 31ல் தில்லை நகர் பகுதி 2ல் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தால் மழைக்காலங்களில் மழைநீர் வெளியில் செல்லாமல் தேங்கி நிற்கிறது. எனவே அப்பகுதி பொது மக்கள் நலன் கருதி அப்பகுதிக்கு மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9,95,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3645 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18.**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 31ல் தில்லை நகர் பகுதி 1ல் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தால் மழைக்காலங்களில் மழைநீர் வெளியில் செல்லாமல் தேங்கி நிற்கிறது. எனவே அப்பகுதி பொது மக்கள் நலன் கருதி அப்பகுதிக்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9,95,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3646 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19.**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 16ல் தாமரைத் தெரு மற்றும் முல்லைத் தெரு ஆகியவற்றில் உள்ள பைப்லைனில் வேர்கள் புகுந்து பொதுமக்களுக்கு குடிநீர் வரவில்லை என புகார் வந்ததின் அடிப்படையில் அப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்து புதிய பைப்லைன் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 4,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3647 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20.**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 8ல் புதுப்பேட்டையில் மேடான பகுதி என்பதால் குடிநீர் வரவில்லை என அப்பகுதி பொது மக்களும், முன்னால் நகர்மன்ற உறுப்பினர் அவர்களும் அலுவலகத்தில் வந்து கூறியதற்கிணங்க அப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்து அப்பகுதிக்கு புதிய போர்வெல் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3648 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21.**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 16ல் வயலூர் உரத்திடலில் புதியதாக அமைக்கப்பட உள்ள FSTP பணியின் பின் பகுதியில் குப்பைகளை வெட்டி அப்புறப்படுத்தி அப்பள்ளத்திற்கு கிராவல் நிரப்பும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9,95,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3649 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22.**

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தை 2018–19ஆம் ஆண்டிற்கு வட்டார போக்குவரத்து துறையின் மூலம் புதுப்பிக்க டைல்ஸ் அமைக்கும் பணி நடைபெற்றது. அப்போது விடுபட்ட நடைபாதை மற்றும் பயணிகள் அமரும் இடம் ஆகியவற்றிற்கு டைல்ஸ் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 7,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3650 நாள். 29.11.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**